வ.உ.சி.

புகழ் பாடிய முன்னோடிகள்

XVC
77

செ.திவான்

வ.உ.சி.

புகழ் பாடிய முன்னோடிகள்

தொகுப்பாசிரியர்
வரலாற்று ஆய்வாளர்
செ. திவான், எம்.ஏ., எம்.பில்.,

49774

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

சுஹைறா பதிப்பகம்
106 F5, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை - 627 002.
✆ 0462 - 572665

வெளியீடு : ஏப்ரல், 1999
விலை : பத்து ரூபாய்

காணிக்கை

சாத்தூர் ஞானப்பிரகாசம்

பாளையங்கோட்டை றாம.அ. முத்தையா மூப்பனார்

கோடையிடி ஆ. திராவிடமணி Ex.M.L.C.

கண்டமங்கலம் மா. குத்தாலிங்கம்

நத்தம் சுதந்திரா (எ) அய்யம்பெருமாள் கோனார்

பாளை சு. காளிமுத்து ஆச்சாரி ஆகியோருக்கு.....

- செ. திவான்

அச்சிட்டோர் :
கனி ஆப்செட் பிரிண்டர்ஸ், திருநெல்வேலி டவுண். ✆ 3331

எண்ண அலைகள்...

உலகெல்லாம் வாழும் தமிழர்கள் நினைத்து நினைத்துப் பெருமை கொள்ளவும், போற்றிப் பாராட்டிடும் வகையிலும் தரணியில் தனக்கெனத் தனிச் சிறப்புப் பெற்ற உத்தமத் தலைவர் வ.உ.சி.

வீரத்தலைவர் வ.உ.சி அவர்களின் திருப்புதல்வர் மதிப்பிற்குரிய வ.உ.சி.வாலேஸ்வரன் 12 B, கோவாப்பரேடிவ் காலனி திண்டுக்கல் - 1 என்ற முகவரியில் இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

செக்கிழுத்த செம்மல் வ.உ.சி யின் அரியபடைப்புக்கள் பல அகிலம் அறியாமல் அழிந்துபட்டு விடக்கூடாதே என்ற ஆதங்கத்தில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சியின் படைப்புக்கள் சிலவற்றைத் தேடி எடுத்து நூலாக்கி அடியேன் வெளியிட்டேன். விடுதலை வீரர் வ.உ.சி அவர்களின் புதல்வர் வாலேஸ்வரனின் இல்லத்திற்கு நேரில் சென்று அன்னாரிடம் அந்த நூல்களை கொடுத்து மகிழ்ந்தேன்; அப்போது அவர்கள் என்மீது காட்டிய அன்பையும், பாசத்தையும் கண்டு பிரமித்து நின்றேன். அதன்பின் ஓர் நாள் அவர்கள் அடியேன் இல்லத்திற்கு வந்து என்னைச் சிறப்புச் செய்தது வாழ்நாளில் நான் பெற்ற பாக்கியங்களில் ஒன்றாகும்.

வ.உ.சி. வாலேஸ்வரன்

29.5.1996 இல் வ.உ.சி வாலேஸ்வரன் எனக்கு எழுதிய கடிதத்தின் துவக்கத்தில்

> **" தன்னுடைய வாழ்க்கையையே மதிப்பிற்குரிய எனது தந்தையவர்களின் வரலாற்றினையும், நூல்களையும் வெளியிடவே செலவளிக்கும் பெருந்தகையீர் "**

என்று அடியேனைக் குறித்து எழுதி, எனக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்திருந்தார்கள். அந்த வரிகளுக்குத் தகுதியுள்ளவனாக என்னை ஆக்கிக் கொள்ள தொடர்ந்து முயன்று வருகிறேன்; அந்த முயற்சியின் ஒரு சிறுதுளி இந்தத் தொகுப்பு நூல்.

தூத்துக்குடி P. வேலாயுதம் பிள்ளை

"நமது தேசாபிமானியாகிய தூத்துக்குடி வக்கீல் திரு. வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் பல பொருள்களையும் பல பெரியார்களையும் பற்றிப் பாடியிருக்கிற பாக்கள் எழுதப் பட்டிருந்த புத்தகம் ஒன்றை நான் இவ் வருட ஆரம்பத்தில் பார்க்க நேர்ந்தது. அப்புத்தகத்தில் பிள்ளையவர்கள் பாடிய பாக்கள் மாத்திரமல்லாமல், பிள்ளையவர்களைப் பற்றிப் பல புலவர்கள் பாடிய பாக்களும் எழுதப்பட்டிருந்தன. அவற்றை அச்சிட்டு வெளிப்படுத்த லாகாதா வென்று நான் பிள்ளையவர்களிடம் கேட்டதில், தமது பாக்களிற் பெரும்பாலனவற்றைத் தாம் அச்சிட்டு வெளிப்படுத்தி யிருப்பதாகவும், தம்மைப் பற்றி ஏனைய புலவர்கள் பாடிய பாக்களை அச்சிடவில்லை யென்றும் அவர்கள் சொன்னார்கள்.

பிள்ளையவர்களைப்பற்றிய பாக்களை யெல்லாம் நான் படித்துப் பார்த்தேன். அப்பாக்களெல்லாம் மிக இனிமையும் அருமையும் வாய்ந்தனவாயிருந்தன. அவற்றைப் பாடியவர்கள் தமிழ்நாட்டில் மிகப் புகழ்பெற்ற பெரும் புலவர்கள். அப்பாக்கள் எழுதப்பட்டிருந்த மையும் காயிதமும் மிகப் பழையனவாகி, மையின் மங்கலால் எழுத்துக்கள் தெளிவாகத் தெரியாமலும், காயிதம் கைபட்ட அளவில் கிழிந்து போகக்கூடிய நிலைமையிலுமிருந்தன. "இப்பாக்கள் அழிந்து போகாமல் இருக்கும்படியாக இவற்றை அச்சிட்டால் என்ன?" என்று பிள்ளையவர்களை வினவினேன். "என்னைப் பற்றிய பாக்களை யானே அச்சிட்டு வெளிப்படுத்துவது தற்பெருமை பாராட்டலாகாதா?" என்றார்கள். .அவற்றை நான் வெளிப்படுத்தலாமா? என்றேன். "அவ்வாறு செய்வதில் எனக்கு ஆக்ஷேபம் இல்லை" என்றார்கள். இப்போது நான் அப்பாக்களை அச்சிட்டு இப் புத்தக வடிவமாக வெளியிடுகின்றேன்.... இப்புத்தகத்திலுள்ள பாக்கள் மாணாக்கர்களுக்கும், பிரபுக்களுக்கும், பாவலர்களுக்கும் ஒரு விருந்தாக விளங்குகின்றன'' என்ற முகவுரையோடு தூத்துக்குடி திரு. P. வேலாயுதம் பிள்ளை அவர்கள் 1935 இல் "தேசாபிமானி வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்களைப் பற்றிய பாடற்றிரட்டு" என்ற சிறிய நூலை நான்கு அணா விலையில் வெளியிட்டு மகிழ்ந்தார்கள். அந்த நூலின் பிரதிகள் இன்று நம்மிடையே கிடைப்பது அரிதாயிருக்கிறது.

பாளை மு. அருணாசலம்

"செங்குந்தர் இளைஞர் சங்க வாசக சாலை தல்லாகுளம் மதுரை" என்ற முத்திரையிடப்பட்ட அந்த நூலின் பிரதி ஒன்று எனக்கு பாளை சகோதரர் திரு. மு. அருணாசலம் அவர்கள் வாயிலாகக் கிடைத்தது. கப்பலோட்டிய தமிழர் வ.உ.சியின் அருந்தவப் பிள்ளை பண்பாளர் வ.உ.சி வாலேஸ்வரன் அவர்களும் அந்த நூலின் பிரதியொன்றினை அடியேனுக்கு 4.6.96 இல் அனுப்பித் தந்தார்கள்.

அந்த நூலில் வ.உ.சி அவர்கள் இப்பூவுலகில் வாழ்ந்திருந்த வேளையிலேயே அவர்களைப் பற்றி புகழந்து பாடிய பல பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. வரலாற்று ஆய்வு மாணவன் என்ற முறையில் அந்தப் பழம் பாடல்கள் காலகதியில் மறைந்து விடக்கூடாதே என்ற எண்ணத்திலும், வ.உ.சி.குறித்த அன்றைய வரலாற்றுச் செய்திகள் பலவற்றை அறிந்து கொள்ள இந்தப் பாடல்கள் உதவுகின்றன என்பதாலும் அதனை மறுபதிப்புச் செய்துள்ளேன்.

அத்துடன் தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார், மதுரகவி பாஸ்கரதாஸ், உத்தமபாளையம் ப.காமாட்சியா பிள்ளை, பரலி சு.நெல்லையப்பர், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை, டாக்டர் மு.வ., கி.வா.ஜகந்நாதன், புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர் வ.உ.சி. குறித்து பாடியுள்ள கவிதைகளையும் இணைத்துள்ளேன்.

எனது முயற்சிகளுக்கு உற்சாகமூட்டிவரும் அண்ணன்மார்கள் நெல்லை மாவட்ட ம.தி.மு.க. செயலாளர் திரு. டி.ஏ.கே.இலக்குமணன், மாநகர் மாவட்டச் செயலாளர் திரு. டி.பி.எம். மைதீன்கான், மாநிலத் தேர்தல் பணி துணைச்செயலாளர் திரு.C.A.R. குட்டி (எ) சண்முகசிதம்பரம், ஐ.சாமுவேல், பாளை சோ. திரவியம் பிள்ளை, S.N. சுப்பையா, எனது மைத்துனர் டாக்டர் SMAQ. ஜெய்லானி, எனது துணைவியார் திவானி ஜஹானரா, தம்பிமார்கள், ப.கல்லத்தியான், செ. இஸ்மாயில், கா.சுப்பிரமணியம், P.S.முத்து, செ.அசன், செ.இப்ராஹிம், புக் ரவி, புக் மணி, எனது மகள்கள் தி.நஜாத், தி. சுஹைனு ஆகியோருக்கும், இந்த நூலை சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த ஹமீது பிரஸ் அதிபர் சகோதரர். சாகுல் ஹமீது அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது போன்ற நூல்கள் வெளிவர இறைவன் அருள்வாஞக!

செ. திவான்

கல்வித்தந்தை சுலைமான் இல்லம்,
106 F/5 திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை - 627 002.

நன்றி

எனது முயற்சிகளுக்கு ஊக்கமளித்து வரும்
மறுமலர்ச்சி தி.மு.கழகப் பொதுச் செயலாளர்

தமிழர் தலைவர் **வைகோ** M.P.

இதயங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செ. திவான்

வரலாற்று ஆய்வாளர்
செ. திவான், எம்.ஏ.,எம்.ஃபில்
எழுதிய, பதிப்பித்த

வீரத்தலைவர் **வ.உ.சி.** குறித்த நூல்கள்

★ வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்

★ வ.உ.சியின் துன்பத்தின் கற்பனை

★ வ.உ.சியின் அரசியல் பெருஞ்சொல்

★ வ.உ.சியும் பெரியாரும்

தேசாபிமானி வ.உ.சிதம்பரம்பிள்ளை யவர்களைப் பற்றிய பாடற்றிரட்டு

மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான்
திரு.மு.ரா.கந்தசுவாமிக் கவிராயர்கள் நிருபம்

பல்லாற்று வருங்கேண்மை யென்னினுமைத் துனக்கேண்மை பண்பிற் றென்ன
வல்லார்சொற் றனரெனது நற்றவத்தா லக்கேண்மை மருவிப் போந்த
நல்லாய்நள் ளூர்ப்பழுத்த நற்றருவை நிகர்கரத்தாய் நாளு மென்புன்
சொல்லாலு மனமகிழ்வாய் சிதம்பரவள் ளாலொன்று சொல்லக் கேண்மோ.

துக்கமிலா திருப்பதுவே முத்திநினைக் கண்கண்ட சொன்னு வல்லோர்
பக்கமுமத் துக்கமனுத் துணையுமுறக் கண்டிலமிப் பண்பாற் போலுந்
தக்ககவி வலவர்சிதம் பரங்காண முத்திதருந் தன்மைத் தென்றூர்
மிக்கவவ்வூர் கண்டுமெமை விடாத்துயர நினைக்காண விலகிற் றம்மா.

ஒப்பதுவே நிலைத்தருவும் பஞ்சமுறுந் தேனுமடி யுறுமென் றோதுன்
கைப்பதுமத் தால்வரைந்த கடிதமொன்றி லிந்நாள்யான் கனகந் தேடி
வைப்பதுநட் பினர்கேயாம் வேண்டுழிவேண்டுவகொடுத்து வருவே னென்ற
செப்பதுவொன் றென்னுளத்துப் புகுந்துமகிழ்தந்ததிறன் செப்பற் பாற்றோ.

பாக்கியம்பல் வகையாலுஞ் சிறப்பவுற்றோய்நிதிமிருபான் பற்றி னேன்பின்
பாக்கியன்புற் றனுப்புவலென் றனையதரு ளென்போல்வார் பரிவி னுற்கொள்
பாக்கியம்பு முனந்தருவாய் பிணிமிடிசெய்துயராற்றல் பார்க்கி னுந்துப்
பாக்கியம்பு படுந்துயரு மாற்றலெளி தாம்போலும் பகருங் காலே.

நீயருளும் பொழுதடைவாங் கேட்டலொணுதெனவுளத்து நினைந்தே னேனுந்
தாயனையா யிதுதிருநாட் சமையமத னுலெழுதச் சமைந்தே னின்பா
லாயசௌக ரியமறியேன் கூடுமேற் றருகவின்றே லாம்போ தாக
நேயமுரு வெடுத்தனைய சிதம்பரரஞ் சிதமதன் னிகர்பூ மானே.

பாளையங்கோட்டை திரு. வ.சண்முகம் பிள்ளையவர்கள்
சி.உலகநாதன் பிறந்ததாகக் கேட்டு எழுதிய நிருபம்.

போற்றவரு பூரணத்திற் புரித்தெழுந்துபுண்ணியத்தின் வடிவாகிப் போதா னந்தந்
தேற்றவரு சிதம்பரத்திற் றிதழ்கின்றசிறுமணியைச் சிவமணியாச் செப்ப லன்றி
நேற்றுவரு புதுமணியா நினைப்போமல்லேநினைக்கவரிற் குறமகளை நிலாவிக் கொண்ட
வாற்றலுயர் குருமணியம் மணியாமென்றேவறைகின்றே மறைகின்றே மறைகின் றேமால்.

சேற்றூர் சமஸ்தான வித்வான்
திரு. இராமசுவாமிக் கவிராயரவர்கள் நிருபம்.
(1080-ம்ளு ஆவணி மாதம் 19 தேதி)

இதம்பரவை யிடஞ்சொலிவன் றெண்டரையாள் சங்கரரா மேசர் செம்பொற்
பதம்பரவி யரனடியார் பத்தியும்புத் தியந்திகழ்விற் பன்ன மின்னூர்
நிதம்பரதந் தனில் மயங்கா மற்கவிஞர்க் கருள்புரிய நிதியந் தேடுஞ்
சிதம்பரசற் குணபூமா விருபொருளு மொருங்கமைந்து சிறப்புற் றேனே.

இருவருடம் போருடம்பா யிருக்குமர னடிபரவி யிரப்போர்க் கெல்லாந்
தருவருடம் போலுதவுஞ் சிதம்பரசம் பன்னுவென் றனையை நம்ப
ரொருவருட மாகியும்பே சாதிருந்தாற் பணம்வருமா வுவந்தென் மீதுன்
றிருவருடங் கிப்பிடிவா ரண்டெதிரிக் கனுப்பிடிற் பொன் சேருந் தானே.

மதுரைத் தமிழ்ச் சங்க வித்வான்
திரு. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் பாடிய
நடுவெழுத்தலங்காரம்.

நலமருவு வாழ்த்தின்பே ரரம்பையின்பேர் தாய்க்கு
நவில்பெயரா காயப்பேர் நல்லபரி யின்பேர்
பலமலியு மிப்பிறப்பின் பேரிவையோராறிற்
பன்னுநடு வெழுத்தானும் பகர்பெயராக் கொண்டாய்
நிலவுமப்பேர் முன்பின்சே ரவைமுறையே யடுத்தார்
நிகழன்ன முடன்கொளச்செய் தெவர்க்கு நிகழ்த்தாம

லிகவுடைய ஞகியாற் கியற்றி யாண்டவ்
வியல்பொழுது மறவாம லெழினீதி யுரையே.

திருவிருந்து வாழ்மனையான் சிதம்பரசற் குணன்றன்னைச் சேர்கற் றோரை
வருவிருந்து திகவிசொல்வீ ரெனக்கேட்டுப்பரிசுதவி மகிழ்ந்தன் ஞர்க்குப்
பெருவிருந்து புரிநயத்தைக் கம்பனுங்கும்பனுமெனப்பேர் பெற்றீர் நீவி
ரிருவிருந்துங் கமுறவுரைப் பீரெனிலப் பாவடங்கா தெனச்சொல் வரரே.

ஸ்ரீவைகுண்டம் திரு. ஆறுமுக தேசிகரவர்கள்
சொல்லியது.

கல்வியிற் செல்வந்தன்னிற் கருணையிற் புகழ்பெற் றோரெங்குஞ்
செல்வஞஞ் சிதம்பரப்பேர் மன்னனைச் சென்று கண்டா
லல்லல்செய் வறுமைதானு மகன்றுபோய் நீங்கிற் றன்றே
மல்குதாம் புறுநல்லூச லெனச்சுழல் மடமை நெஞ்சே.

ஆழ்வார்திருநகரி திரு. பெரிய திருவடிக்
கவிராயரவர்கள் நிருபம்

சீர்கொண்ட நமதிந்து தேசமே யுலகிற் செழிப்புறச் செய்யு முசிதா
செப்பிவரு வோர்மிடி யகற்றித் தினந்தொறுஞ் சேமங்கொடுக்குமதனே
யேர்கொண்ட கஞ்சத் திலங்கிடு நளினித னின்னருட் பெற்ற சிம்மா
வெப்பொழுது மொவ்வோ ருயிர்க்குண மறவா திணங்கி யிடுமிசை
தீபனே.
கார்கொண்ட கையனே கவிவாணர் கட்கெலாங் கருதி யேயருடீரனே
கருணைகொடு வாசிப்பு மாஞான முற்றவர் களிகூரு மினிய கன்ஞ
பேர்பெற்றவாவெனது கவியினடு நாயகா பேசரிய சீர்மையுடையோய்
பேணியிப் புவிதன்னை மன்னரர சாட்சியாப் பிரியமொடு வாழ்கு வாயே.

சேற்றூர் சமஸ்தான வித்வான்
திரு.மு.ரா. அருணாசலக்கவிராயரவர்கள் பாடியன

கற்றாரைக் கற்றாரே காமுறுவ ரென்றௌவை கருதிச் சொன்ன
சொற்றான் மெய்யாகி லொன்றுங் கல்லாத வென்போல்வார் தூய நின்னே
யுற்றாசை மேலிட்டுப் பற்றுதலாற் கற்றாரென் றுரைக்க வேண்டு
மெற்றாலுஞ் சிறந்தகல்விப் பொருள்படைத்த சிதம்பரப்பே ரிறைவ ரேறே.

மணங்கமழ்நின் சீர்த்தியினைச் செய்யுளாலுரைப்பதற்கு வந்தேன் யாதே
லிணங்குறா லுணர்பெரியோ ரெவ்விதத்தே னுஞ்சிறந்தா ரென்ற நல்லார்
குணங்களுரைப் பதுநன்றென் றிசைத்ததனாலுயர்ந்தவர் தங் கொள்கை யீதே
வணங்குவார்க் கருள்புரியுஞ் சிதம்பரசற்சனசமுக வள்ளற் கோவே.

கடையிலுநின் னிடத்திலுமாம் பிரபலங்கள் பகரு வருட்கலந்து வைகுந்
தடையில்புகழ் மலிதிருமந் திரநகரே தனதாகத் தங்கு நீநல்
லுடையிலணி யில்வனப்பின் றெனக்கல்வி கற்றதனுக் கொப்ப மேலாங்
கொடையிலுயர்பெருந்தகைமைகைக்கொண்டாய்சிதம்பரசற் குணபூ மானே.

உலகிலுதித் திடிற்புகழோ டுதிக்கவெனுமொருகுறளி னுண்மை யோர்ந்தே
யிலகுமந்தப் புகழ்பெறுவ தெவ்விதமென்றாய்ந்துதன்பா லிரப்பார்க் கீயு
நலமலியுங் கொடையினா லாவதெனும் வள்ளுவர்சொன்னயத்தாற் கண்டு
பலர்புகழு மீகையினை யீகையுற்றாய் சிதம்பரபூ பதியாம் வேளே.

கற்பகமே கேட்டகெலாங் கண்டவர்க்குக்கொடுக்குமெனக் கற்றோர் சொற்றா
ரற்பகலா வஃதெங்ங னிருப்பதென வற்பகலா தலைந்து தேடிப்
பொற்பகலா நின்னிடத்தி லேவந்து பெருமகிழ்ச்சி பூப்பக் கண்டே
னற்பலனே யினிப்பெறலாஞ் சிதம்பரசற் குணமிகுந்த நாவ லோனே.

விண்ணிலமர் கொண்டலுங்கன் னனுநின்போற்கொடையினன் மேலா மென்றிங்
கெண்ணினரேற் புகழன்றிப் புண்ணியநின் போலந்த விரண்டு மிந்த
மண்ணிலுறு மோபிறர்தம் பொருளையே யெடுத்தென்றும் வழங்க லாலே
யுண்ணிறைபே ரன்பமையுஞ் சிதம்பரசற் குணநிதியா முதார மாலே.

மாமிமரு மகளுலகில் வாஞ்சை யுற்றோ ரிடத்தினிலே வசியா ரென்றிப்
பூமியிலுள் ளார்சொல்வ ரவர்நாண நாமாதும் பூமா துஞ்சேர்ந்
தாமினிய நட்புறீஇ நின்னிடத்தி லிருப்பதனை யறிந்து கொண்டோ
நாமிஃதோர் புதுமையென்ப தேதேற்றஞ் சிதம்பரநன் னலமிக் கோனே.

சேற்றூர் சமஸ்தான வித்வான்
திரு. இராமசுவாமிக் கவிராயரவர்கள் நிருபம்

இந்தவொரு தரைமீதே ரெயிலோட வதிசயத்தோ டினிதாய்ப் பார்த்து
வந்தவரே யதுபெரிதா வந்தரெயிற் கெண்மடங்கா வருவே கஞ்சே
ரந்தமிகுங் கப்பலையே யுங்களுக்கு முன்னீரி லணியா யோடச்
செந்தமிழ்தேர் சிதம்பரவேள் செய்துமுடித் ததுபெரிதா செப்பு வீரே.

அப்பணியுஞ் செஞ்சடிலர் சங்கரரா மேச்சுரர்தா ளன்பாய்ப் போற்றி
யெப்பணியும் பணிந்துசெய்யு முலகநா தேந்திரன்புத் திரனென் றோது
செப்பலைமா முலைவிழியார் மடல்வரையுஞ் சிதம்பரவே டீரங் கொண்டு
கப்பலையப் பலைமீது தானடத்திப் பெரும்புகழைக் கைக்கொண் டானே.

ஒன்றியெழு பதுவெள்ளங் கவிகளிலக் குவன்மற்றோர்டக் குயிருண் டாக
வன்றுதழை யிலையுறுசஞ் சீவியைமா ருதிகொணர்ந்த தரிதோ மேலா
மன்றமதி சிதம்பரவேள் கோடான கோடியெனு மனுபி ழைக்க
வின்றுநல மணிவிளைகப் பலைக்கொணர்ந்தா னிதுபெரிதோ வியம்பு வீரே.

கலங்கலமா வாரிவிட்டான் கற்றவரெல் லாமகிழக் கனக மீண்டுங்
கலங்கலமா வாரிவிட்டான் கொழும்புநிதி வாரிமற்றோர் களுக்கு மீய
விலங்குமதி யாததுரி யோதனன்பாற் பாண்டவர்க்கைந் தீவா யென்று
னிலங்குமதி யானனத்தான் சிதம்பரபூ பதியெனும்பே ரிடப்பெற் றோனே.

வல்லாளன் சிதம்பரவேள் கப்பலுங்கேட் டோர்க்குநிதம் வழங்க லாலே
யெல்லாருங் கற்பதரு வென்பரஃ திலையெனும் பேரெய்த லாலே
பொல்லாத வண்டர்களைப் பொருந்துதலாற் கண்ணீரைப் பொழித லாலே
சல்லாப நடையிலதாற் கவடுளதா லிதற்குநிகர் சாற்றொ ணாதே.

அன்றிலங்கை நகர்காணக் கவிகளுற வைப்பிடித்தோ ரணையுங் கட்டி
வென்றியிரா கவன்கண்டா னப்படிக்கின் றித்தனது விநயத் தாலே
நன்றியுறுஞ் சிதம்பரவேள் மனுக்களெலா மெவ்வுலகு நயந்து காண
வின்றிரண்டு கப்பலையும் வரவழைத்தா னிவன்புகழ்மற் றெவர்க்குண் டாமே.

தேனூற்றுஞ் சுனைப்பொதிகை முனிவனெனச் செந்தமிழைச் சேர்ந்தோ யுன்மே
ஞானூற்றுக் கோவைதனைப் பாடவெண்ணி யொருபாகம் நவின்றேன் முன்னுன்
மேனூற்று வரையும்வென்ற வீமாமற் றதும்பாடி வியப்புற் றங்குத்
தானூற்ற மொடுவருவேன் றப்பாதுன் னெழுத்துவரத் தயைசெய் வாயே.

மதுரை தமிழ்ச்சங்க வித்வான்
திரு. சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் பாடியவை.

சீராற்றுப் பாய்ச்சிகடற் பாச்சியெனு நாவாயாற் செயங்கைக் கொண்ட
பார்வேந்தர் மரபில்வந்தோ னுதலிற்பாண் டித்துரைபூ பால னென்று
நேராஞ்சு தேசியர் தஞ் செல்வமென விருநரவாய் நிலவு கின்ற
வேரார்சங் கத்தலைவ னெனவிருப்ப தாற்செயமே யெய்துந் தானே.

முன்னொருப கீரதமன் கங்கைகொணர்ந் தாற்போற்பன் முயற்சி யாற்சீர்
பன்னுசிதம் பரவள்ள லிருநாவாய், கொணர்ந்தானென் பார்பல் லோரம்,
மன்னவன்றன் முன்னோர்க ளின்பமுறச் செய்தனனிம் மாநி லத்தி
லின்னரிவ ரெனவொண்ணுச் சுதேசியரின் புறச்செயலா லிவன்மே லோனே.

அயர்ச்சியின்றி யூக்கமுடன் சிதம்பரவேள் செயுமுயற்சி யாவெந் நாளு
முயர்ச்சிதிக ழிருநாவாய் கொணர்ந்துசுதே சியர்க்குநிதி யுதவ லாலே
முயற்சிதிரு வினையாக்கு மென்றுதிரு வள்ளுவனார் முன்மொ ழிந்த
நயத்தினைக்கண் ணூற்கண்டோங் கண்டோமென் றெவருமினி
நவில்வர் தாமே

திருமார்பன் ருசரதி வானரர்க ளுடனிலங்கை செல்ல வாய்ந்தே
யொருசேது மலைகளா லியற்றினனு வாயிவைபோ லுரும லென்னத்
தருவார்மந் திரநகரிற் சுதேசியரெல் லாமின்பந் தழைக்க வந்த
விருநாவாய்க் கிவ்வுலகி லெத்தனைநா வாயுமிணை யியம்பொண் ணாதே.

இலகுசுதே சியரெல்லா மொற்றுமையாய்ப் பலமுயற்சி யியற்றிற் செல்வ
நிலவமிகு சுகமுறலா மென்பதற்கோ ரறிகுறியா நிகழெந் நாட்டுக்
குலவுவனங் களுங்கொண்டு கூலம்போன் மந்த்ரநகர் கொழும்பெங் குஞ்சூழ்ந்
துலவுசுதே சியச்சங்க நாவாய்கள் வாழிநீ டூழி மாதோ.

திரு. தெய்வநாயகப் புலவரவர்கள் பாடிய
ஆசிரிய விருத்தம்.

பொன்னுடர் புகழ்சிதம் பரநாத னைத்தினம் போற்றித் தொழுந்தரசனே
புண்ணிய தயாளனே சைவவே தாகம புராணசாத் திரவரசனே
நன்னுவி னுலினிய் செந்தமிழ் பாடிவரும் நாவலர்க் குபகாரனே
ராசசபை மெச்சும்ப்ர சங்கனே யினியமொழி நவிலும்வாய் வித்தாரனே

யெந்நாளு நலம்வளர்ந் தோங்கிய சுதேசிகட் கிறைவனே சத்துருக்க
னெனுமதக் கரியைமிக வேதோற் றிடச்செயு மெங்கள் துரை செயசிங்கமே
கன்னு வுதாரனே கொண்டலென வேயிருகரங்கொண்டு நிதம்வழங்கு
க்னசெல்வ னேசிதம்பர வீரனே யெனது கவிநலங்கண் டறிவையே

அட்டதிசை யெங்குமே மெச்சவே கொடிகட்டி யசையாத மணிகட்டியே
யனகா புரிக்குபே ரக்குரிசி லென்னவே யரசாட்சி புரியுநின்பால்
திட்டமுட னேகலைக் கட்டரதி காரஞ் செலுத்திடுஞ் சட்சுநீதி
செய்திடுங் கவர்ண்மெண் டுத்தியோ கஸ்தரவர்சேர்ந்துமே வந்துகோர்ட்

சட்டமதை யறியநின் பேட்டிகண் டாலோ சனைகளுன் னிடத்தினிதமுந்
தான்கேட்ப ரெங்கள்குறை தீரென் றநேகருன் சமுகத்தில் வந்துநிற்பர்
துட்டரை யடக்கிடுஞ் சிங்கமே புவிபுகழ் சுதேசிகடமக் கதிபனே
சொலுமந் தரநகர் வாசனீயே சிதம்பரத் துரைராச செல்வநீயே.

கப்பலே றிக்கடல் கடந்திந்தி யாவின்மிகு   கபடமா வந்த இங்கலீஷ்
கம்பெனி வர்த்தகம் நடத்தியிங் குள்ளவர்கள்கைப்பொருளை யினிமை காட்டித்
தப்பதா க் கூடியே தாமெடுத் துக்கொண்டு தமதிங்கி லாந்துதேசந்
தனிலேகு மந்தவெள் ளைக்கார ருக்கிடஞ் சற்றுங்கொ டுக்கலாகா

செப்பமா நஞ்சுதே சிகள்வர்த் தகத்திற் சிறக்கவழி காட்டிமிக்க
சீர்பெறச் செயவேண்டு மெனவோங்கு கம்பெனி சேர்த்துச் சுதேசிநாம
மிப்புவியி லெங்குந் தொனித்திடப் பாரிலுள தெல்லாம் வருத்தியெவரு
மிச்சையுற வேசெய்த துரைசிதம் பரசுதேசிக் கிறைவசெய சிங்கமே.

ஜெயவீர சிங்காரச் சிந்து

நாமகள் மாமி கமலப் பூமகள் பூமிபுகழ்
நண்ணு செல்வ வாச துரை ராசனே - பக்தி
பண்ணுவோர்க் கருள்சிதம் பரேசனே யெந்த
நாளுமே துணையாளுமே யவனுகுமே யென்நாடியே தொழு
ஞானதாச னுகவந்தா னென்னவே-மந்த்ர மாநகரில் வாழு மணிமின்னவே.

மாமறவி சேய்க்கிளைய வீமனவ னேர்க்கிளைய
மாமணிக்கி ரீடனியே பாரிலே - வந்து
சேமமுட னேசிறந்த பேரிலே மிக்க
மாசிலாத சிதம்பரத்திரு நாமமேதிக ழிந்திரத்தன-வாசனே
சுதேசிமக ராசனே பரமேசனே தயவுகொண்ட தாசனே.

சொந்தமுனக் கிந்தியாச் சுதேசிகளீ டேறவந்து
தோன்றிய மாமணி யெனச் சொல்லவே-லோக
மூன்றிலு முனக்கிணைவே றில்லையே மகா

சூரராவண வீரனுனவ னுவியானது சோரவே-யெதிர்
தோன்றிய கோதண்டராம சாமியேவந்து தோன்றினு
னென்னவே சொல்லும் பூமியே
சிந்தையின் மயங்கிவாடி நொந்திடவே வெள்ளைக்காரர்
செய்த வர்த்தகக் கம்பெனி தோற்கவே தவஞ்செய்த
நஞ்சு தேசிகளைக் காக்கவே வந்த சீயமே திரு

மந்த்ர மாநகர் மீதுமே யொரு-சந்த்ரனுகவே
யுதித்தா யிந்தி யாவிலே வாழ்சு தேசிகட் கரசனியே பூவிலே.
தங்கு மிங்கி லாந்து தேச மெங்குஞ் சென்று
டில்லிபம்பாய் தானிலங்கை கல்கத்தா வங்காளமே
மோரங் கிலங்கு சென்னை மலையாளமே சென்று
தானுமே மகராசராச மைசூரி ராசனே-நேசமாகவே
சந்தித்துக் கலந்து கூடிப் பேசவே நீயுஞ்
சிந்துத்துச் செய்தாய் வானச் சுதேசியே.

பொங்குகடன் மீதினி லங்குதிற லேழுபரி-பூட்டியோ
ராழி ரதத்தி லேறியே-யொளி காட்டியே
கிரணங் களைச் சீறியே - கமழ்

போது மாமல ராகவே வரு பானுநேர்நிலா தோடுமோர்பனி
போலிங் கிங்கிலீஷ் வர்த்தகக் கம்பெனியே - யாக
ஞாலந் தனில்வந்த வீரவா னீயே.

செப்பமா யிலங்குபுகைக் கப்ப லிவங்கை யனேக
தேசஞ் செல்லவே வேண்டு பொன்னுமே-கொடுத்
தாசை மாயச் சுதேசிக் கப்ப லென்னுமே

பேரைச் செப்பவே புவி-யாளு மன்னவ ரொப்பவே
யுனை மெச்சவே துரை சிங்கமே-யோங்க வுன்பேர் விலாசமே
புவி யெங்குமே வர்த்தக முன்னுல் வாசமே.

இப்புவியில் வாழுஞ் சுதேசிப் புகழ் துலங்கிடவே
யிந்தியா வேளாண்குல மீதுமே-தோன்றி
வந்தசெய சிங்கநீ யெப் போதுமே
பரமேசனுந் துணையாக நின் றுனையே

சுதேசிக ளான பேரெலா மெங்கள் செல்வராச னெனப்
போற்றவே-யருள்
மங்களமாச் செய்தா னுன்பேர் சாற்றவே.

ஆசிரிய விருத்தம்

வட்டவா ருலகிலுன்பேர் சொல்லிடிற் சீறி வருமரவ மஞ்சியோடு
மதலையமு வாய்குர லொடுங்கிடும் பாலையும் வந்துகா கந்தொடாது
துட்டவீ ரப்புலியு மெட்டியடி வையாது சொன்னேன் மதக்குஞ்சரந்
தோற்றுவிழ வருமரிக் குருளையே யீசனுன் துணையுனக் காதலாலே
தொட்டகா ரியமெலா மநுகூல மாகவே தோன்றிடு மருட்பாவலர்
சொற்கவி நலந்தரு முனக்குநிக ராரைநான் சொல்வே னுனைப்பகைத்தோர்
நட்டமா கிடுவரிதை யெனதுகவி யாலிந்த நாடறிய நானுரைத்தே
னற்சுதே சிக்கிறைவ னேசிதம் பரவீர ராசனே யுல்லாசனே.

சற்றுமே யஞ்சீ ரெனத்தஞ்ச மென்றோர் தமக்குறுதி சொல்லியவரைத்
தாங்குந் தயாளகுண வள்ளலே மிகவந்து தழுவுகலி யானைத்தலை
யற்றுமேவிழவே யடித்திடும் புண்யகோ ளரியே கொடுக்குங்கொடை

யாளியே தினகரன் புதல்வனே கொண்டலே ரங்காத் துரைமன்னனே
யுற்றதோர் தில்லைச் சிதம்பரச் செல்வனே யுன்பங்கில் வாழ்கிறுனென்
றுலகெங்கு மேதெரியு நானுமே யறிவே னுனக்குநிக ராருமில்லை
கற்றதோர் வாயின்ஞன் மற்ரேர்கண் மேலினிக் கவிநா னுரைக் காமலென்
கவலைதீர்த் தருள்சிதம் பரராச னேயென் கவிக்குதவ விதுசமயமே.

கூடிடுஞ் சபையோர் மதிக்குமா லோசனை குறிப்பா யுரைக்குநீதிக்
கோர்ட்டாரு மொப்பவே வக்கீல்மா ரதிசயங் கொளவே வழக்கையெவரு
நாடிடும் படிமிக்க கரடுசொலு முரடர்க ணடுங்கச் சமர்த்தனுக
நவிலும்விவ காரனெவ ருக்குமே சாதுரிய நளினவார்த் தைப்பிரசங்கன்
பாடிடுஞ் சங்கீத மோக ஞமகளருட் பனுவலர் சகாயனீகை
பட்சந் தயாளமன் புடையவ னிவன்றயா பரணிவ னல்லொழுக்கன்
றேறிடுந் தொண்டர் துதி தில்லைச் சிதம்பரச் சிவகாமி கேள்வனன்பன்
செகமெலாம் புகழ்சுதே சிக்கிறைவ னிவனே சிதம்பரச் செயசிங்கமே.

செகமெலாம் புகழ்நலன் வளர்ந்தோங்கு மிந்தியாச் செல்வச்சு தேசிகடைமைச்
சேர்த்துலகில் மேன்மையுற வேசெய்த துரைவீர சிங்கமே யிந்நாளிலென்
னகமெலா நொந்திடுங் கவலைதீர்த் தின்பசுக மடையவே செய்யவெவரா
லாகுமென் றெனதுகா ஞேவவோ டிச்சென் றலைந்துபார்த் ததிலெங்குமே
புகழெலா மோங்கவே யுன்பேர் தொனிக்கவே புண்யபூ பதியென்னவே
புவியோ ருரைத்திடக் கேட்டுநா னெனதுகலி போக்குவா யென்றுன்றனுற்
சுகமெலாம் பெறலா மெனத்தேடி யுன்றனைச் சொந்தமாய் நம்பிவந்தேன்
றுணைநீ யெனைக்காப்பை யேசிதம் பரவீர துரைராச வுல்லாசனே.

வேறு

வேண்டியபே ருன்னுலே மேன்மைபெற்ரு ரெனப்புவியோர் விளம்பக் கேட்டீங்
கீண்டியவாழ்வு வுன்னுலே யானுமே பெறலாமென் றெண்ணி வந்தேன்
பாண்டியபூ பதிசிதம் பரசெல்வ மாமணியே பருதி மைந்தன்
றூண்டியமா புண்ணியத்தைத் தீண்டியமா னீயெனவே சொல்லி னேனே.

எந்நாளுங் கொண்டலென வழங்குகின்ற புகழ்சிறந்த வீகை கொண்ட
கன்னுவு தாரனெங்கள் துரைசிதம் பரவள்ளல் காதல்கொண்டு
மின்னுரும் பொருளீவன் புலவோரே வாருமென விரும்பிக் கிள்ளை
தன்னாசை யாலழைக்கு மாளிகையில் வீற்றிருக்கும் தனவானியே.

என்பேரைக் கண்டறிவா ரென்கவியாற் செங்கமலத் திருக்குஞ் செல்வி
மின்பேரைக் கண்டறிவார் வாழ்வினாற் புவியாளும் வீர செங்கோல்
மன்பேரைக் கண்ட்றிவார் நீதியா சாட்சியால் வள்ள லேயுன்
றன்பேரைக் கண்டறிவார் சிதம்பரவேந் தேயுனது தருமத் தாலே.

கோனினைத்தாற் குடிகளுக்கு நலம்பெறயர வையுமுதவக் கூடும் வேதன்
றானினைத்தான் மானிடர்க்கு நீண்டாயுள் வரமருளத் தகுமெ னக்கு
நீ நினைத்தால் வேண்டியதெல் லாமுன்னாற் றரக்கூடு நினைய டுத்த
நானினைத்தாற் சிதம்பரவேள் வாழ்கவெனப் புகழ்ந்துகவி நவிலு வேனே.

வண்டாருந் தெரியலணி மார்பசிதம் பரவேந்தே வாயா லுன்பேர்
விண்டாலும் வினைதீரும் விருப்பமா யுன்முக விலாசத் தோற்றங்
கண்டாலுங் கலிதீருங் கவலைகொண்டோ ருன்றனையே கதியென்
றண்டிக்
கொண்டாலு மின்பசுக வாழ்வனைத்துங் கைகூடுங் குவல யத்தே.

என்போலே துன்பமுற்றா ரெவருமிலை கடுஞ்சிறையி லிருந்த ராமன்
மின்போலே தயங்குகின்றே னெனைக்காக்க வுனையலது வேறே தக்கோ
ருன்போலே கிட்டாது துணைநீயே தனுவேந்துக் குதவு தேர்மா
மன்போலே யரசாள வந்தசிதம் பரசெல்வ வள்ள னீயே.

ஆசிரிய விருத்தம்

எங்குமே புகழ்திரு வனந்தபுர மாநகரி ராசா விடத்தின்முன்
னென்பிதா வைப்பெற்ற முன்பிதா வேந்துக் கிரண்டாவ
ததிகாரமா, யங்குமேவுத்தியோகஞ்செய்துமுதிர்வயதடைந்து
விண்ணுல கெய்தவே யப்பா லெனைப்பெற்ற தந்தையு மிலங்கை
சென்றதில் வர்த்தகம் பெரியதாய்த், தங்கவே தேடியது
நாற்பதா யிரமதுந் தவறினது பொருள்நட்டமாய்த் தமியேனு
மிங்கிலீஷ் பாசாகி மேன்மையாய்ச் சர்க்காரில் வேலைபார்த்
தேன், மங்கவே யெனதுகண் பார்வைமறை வானது வருந்தி
னேன் கவிகள்பாட வந்துநா மகளருட் டெய்வநாயக வித்
துவா னெனப்பேர் கொண்டனே.

பொல்லாத கலிப்புலிவந் தெனைவிரட்டு வதற்கஞ்சிப் புவியி லுன்னை
யல்லாலோர் துணையிலையென் றோடியுன தடைக்கலமா யடைந்தேன் யானு
மல்லாரும் புயவேந்தே கைவிடில்யான் பிழையே னென் வருத்தந் தீர்த்திங்
கெல்லாரும் புகழவெனைக் காப்பைசிதம் பரதுரை ராசேந்த்ர னீயே.

ஸ்ரீ சகஜாநந்த ஸ்வாமியார் எழுதிய நிருபம்

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றா ரெனக்கழறு - மாமறைக்குச்
சான்றாச் சிதம்பரமென் தந்தை நினைக்கண்டேன் -
நான்மாறென் செய்வே னவில்.

கைம்மாறு வேண்டா கடப்பாட்டி னென்றனக்கு
மெய்ம்மாட்டி நின்றருளும் வித்தகனே - செம்மறையின்
பாவனைத்துஞ் சிந்தை பதித்தேன் சிதம்பரமென்
தேவநின தின்னருளாற் றேர்ந்து.

சாவா மருந்தெனவே தற்பானார் வள்ளுவர்
பாவா லறிவெனக்குப் பாலித்த - தேவா
சிதம்பரமென் சற்குருவே சிந்தையினில் நின்னின்
பதம்பெற்றே னென்றும் பணிந்து

ஒட்டப்பிடாரம் சங்கீத வித்வா
திரு. சு. **முத்துசுவாமிப் பிள்ளையவர்கள்** நிருபம்.

அத்தனருள் பெற்றே யடுத்தோரைக் காக்கின்ற
சித்த முடைய சிதம்பரமே -நித்தம்பா
உன்மேலே நாட்டம்வைத் தோதுமுத்து சாமிபிள்ளை
தன்மே ளருள்மிகவே தா.

செகத்திருளை நீக்குகின்ற செங்கதிரோன் போலென்
அகத்திருளை நீக்குகின்ற வண்ணல் - இகத்துன்
முகத்தினைக் கண்டு மொழிவதற் கின்றித்
திகைத்துநிற் கின்றேன் றினம்.

ஆழ்வார்திருநகரி பென்ஷன் ரெவினியூ இன்ஸ்பெக்டர்
திரு. **அனந்தபத்மநாப பிள்ளை** அவர்கள் எழுதியது (16 - 2 - 1914)

அருளது வடிவாய்த் தோன்றி அமரர்கட் கரசையீந்து
குருமுனிக் குபதே சத்தைக் கூறிய முருகா நாளும்
அரியவென் சினேகனென்றே அறைந்திடுஞ் சிதம்பரத்தைக்
கருணையால் காப்ப துன்றன் கடனெனக் கழறினேனே.

சவரிமங்கலம் வித்வான்
திரு.**சிதம்பரவேலுப்பிள்ளை** அவர்கள் பாடியவை.

செ சடை முடிமே னதிமதி புனையுஞ் சிவபரம் பரனிடத் தமர்ந்த
மஞ்சமர் குழல்சே ருலகநா யகிநின் மைந்தனெஞ் சிதம்பர வள்ளல்
தஞ்சமென் றடைந்தோர் தம்மையா தரிக்குஞ் சற்குண நிதிசிறை தவிர்த்தாண்
டஞ்சலென் றருள வீதுநற் சமைய மமலையே விமலநா யகியே.

நாயக மாயிவ் வுலகிலே ழைகட்கு நன்மையே செய்தனை வருக்குந்
த்ாயக மாய்க்காத் தருள்சிதம் பரவேள் தனைச்சிறைப் படுத்துதல் முறையோ
தூயநின் கோயிற் றிருப்பணி முடித்தோன் சுதனென்ப தறிந்திலாய் கொல்லோ
வேய்வனத் தமர்ந்தோ னிடத்துறை பரையே விமலையே வுலகநா யகியே.

உலகநா யகியே வுன்சின கரத்தி லுலப்பிலாத் திருப்பணி முடித்த
உலகநா தப்பே ருத்தமன் றவத்தி லுதித்திந்த வுலகுளோர்க் கெல்லாந்
திலகமே யெனவாழ் சிதம்பர வள்ளல் சிறைதவிர்த் தன்பிலா ரியற்று
கலகமே தவிர்த்தாண் டருள்பரம் பரையே கலிதவிர்த் தாதரித் தருளே.

ஆதர வின்றி யலையுமே ழைகளுக் கரும்பசி தணிக்குநன் முயற்சி
தீதறப் புரியுஞ் செயலுடைச் சுகுண சிதம்பர வள்ளலுக் கடுத்த
வேதனை தவிர்த்தாண் டருள்செயா திருத்தல் விதியல நின்பணி புரியங்
கோதக லுலக நாதவேட் கருளா திருந்திடிற் குற்றமா முனக்கே.

குற்றமென் றுனையான் கூறிடத் தாமோ கொதிப்பினா லுரைத்தன னடியேன்
கற்றமே தாவி யோரெலாம் வழுத்துங் கடவுள்மந் திரநிக ரெனவே
யுற்றிடும் வந்தே மாதர மெனுமோ ருரையுத வாதென விதுசெய்
பெற்றியோர்க் குணர்வொன் றுதித்திடி லிந்தப் பெருந்துய ருலகுளோர்க்
கிலையே.

இலையெனத் திரியு மேழைகட் கிரங்கி யிவர்பசிப் பிணிதவிர்த் தின்ப
நிலைபெறச் செயுமா றெண்ணியொற் றுமைக ணோர்ந்திடில் வாழலா மென்றுங்
கலகமற் றெவருங் கைத்தொழி லியற்றல் கருமநற் கருமமா மென்றும்
பலர்செவிக் குரைத்தல் முறையல வென்றாற் பாவமே பாவமே யந்தோ.

அந்தரி விமலை யாரணி யுலகாண் டருள்பரி பூரணி யுனது
சொந்தமா ளிகையா மாலயப் பணிசெய் தோன்றலா மூலகநா தேந்திரன்
மைந்தனிவ் வுலகோர்க் குறுதுய ரகற்றும் வள்ளலிவ் வருத்தம தடைந்தால்
இந்தமா நிலத்தில லெவர் துய ரடையா ரினிதரு ளுலகநா யகியே.

உலகுளோ ரெவரு மோருத ரத்தி லுதித்துளோர் போலவோற் றுமையா
யிலகிடச் செயுமா றெணியதற் கான வெழிற்பிர சங்கமே நடத்துங்
குலமக னெமையாட் கொளுந்துரைச் சிங்கங் குறிப்புடைச் சிதம்பர வள்ளல்
நிலைபெறி லுலக நிலைபெறு மருள்செய் நெடியமாற் குரியசோ தரியே.

தரியலர் முன்னோ ருகத்தினிற் கற்ப தருவினைக் குறைக்கநேர்ந் ததுபோற்
பெரியதென் னளகைப் பதிவளர் பெரியோன் பீடுறு மூலகநா தேந்திர
னுரியமெய்த் தவத்தால் வருசிதம் பரவேட் குறாநிலை யுஞற்றினா ரந்தோ
சரியல வுலகாண் டருள்பரம் பரையே சங்கட மகற்றியாண் டருளே.

அருமைநா யகமிவ் வுலகிலே ழைகளுக் கருநிதி யன்பருக் கன்பன்
கருணைவா ரிதிமா கலைவலோ னெனது கண்மணி விண்மணி சுரபி
தருநிகர் கொடையான் சிதம்பர வள்ள றனைச்சிறை தவிர்த்திடி லுலகம்
பெருவளங் குலவு மூலக நாயகிநற் பேறவற் காகுமா றருளே.

அந்தரத் தமா ரிடரெலா மகற்றற் காயவ தரித்தரு ளிராமச்
சந்திரன் வனம்போ யினனெனக் கேட்டோர் தமைநிகர்த் திந்தமா நிலத்தோர்
சிந்தைநைந் துருகி யரற்றுத லினது திருச்செவி தனிற்புக விலையோ
மந்திர வடிவா யமர்ந்தருள் பரையே வாலையே வுலகநா யகியே.

அப்பலை சூழிவ் வுலகிலே ழைகளுக் கரும்பசிப் பிணியெலா மகற்றுங்
கப்பலைத் திருமந் திரநகர்க் கிரண்டு கப்பலைக் கொணர்ந்தகா வலனை
யிப்புவிக் கரச ரிருஞ்சிறை யிடுதற் கேதுவொன் றில்லையே யெழிலார்
முப்புர தகன சவுந்தரி யீது சமையமுன் னின்றுகாத் தருளே.

கற்பக தருப்போ லடைந்தவர்க் குதவுங் கருணைவர ரிதிதமிழ்க் கலைதேர்
விற்பன னுனதா லயத்திருப் பணிசெய் வேலையே வேலையாக் கவனித்
தற்பக வியற்று முலகநா தேந்திர னருந்தவப் புதல்வனீ தடைதல்
நற்பரி சலவே யுலகநா யகியிந் நாட்சிறை யகற்றியாண் டருளே.

பஞ்சைகள் சேரத் திரண்டொரு முனிசீ பாலுறு மதிப்பிலா தவர்கள்
கொஞ்சமா மதியா லியற்றுநீ வினைக்காக் கோதிலா வுலகநா தேந்திரன்
மஞ்சனை யமுத சஞ்சீவி நிகராம் வள்ளலைச் சிறையிடல் வழக்கோ
தஞ்சமென் றடைந்தோர் தம்மையா தரிக்குந் தயாபரி யுலகநா யகியே.

புல்லர்க ளறிவி லாது செய் பிழைக்காய் புவியெலாம் புரக்கவந் துதித்த
செல்வநா யகனெஞ் சிதம்பர வேளைத் தெறுசிறைப் படுத்துதல் முறையோ
தொல்லைதீர்த் தருள்தென் னளகைமா நகர்வாழ் சோதியே வுலகநா யகியே.

அரக்கனோர் பிழைசெய் ததற்கென்மார் பகுத்தி லம்புநாட் டியதிது முறையோ
இரக்கமெங் குகுத்தா யெனப்புகல் வாலிக் கிணையதா யறிவுளா ரெவருந்
தரக்குறை வாஞ்சிற் றறிஞர்செய் பிழையிச் சமர்த்தன்மேற் சுமத்துத லுலகம்
புரக்குமன் னவர்க்கீ தடுக்குமோ வென்பா ரென்செய்வார் புவியிலுள் ளோரே.

புவியெலாம் புரக்கு மரசர்கள் முறையிற் றவறிடா ரவர்களாற் பொருந்துந்
தவிசில்வீற் றிருக்கும் போதி காரத் தலைவரு முறைமையிற் றவறார்
செவியுண வெனுநற் கேள்வியில் லாரிற் சிலர்புகல் பொய்க்கரி யலலோ
கவிஞர்கள் திலகன் றனைச்சிறைப் படுத்தக் காரண மாயின தந்தோ.

அம்புவி தனையா ளரசர்க்குச் செவிகண் ணுமெனப் புகலுமம் மாற்றம்
வம்பதே மனுநீ தியிற்சிறந் துள்ளோர் வார்த்தையொன் றெழுதரங் கேட்டு
நம்பிடத் தகுமே லமைச்சராற் றெளிந்து நன்குதீ துணர்வரம் முறைமை
யிம்பரி லரச ரகம்புகிற் சிறைமீண் டிடுவதற் கையமொன் றிலையே.

நற்றமிழ்க் கலைதே ருலகநா தேந்திர நாவல னியற்றுநற் றவத்தாற்
பெற்றபா லகனென் கண்மணி யுலகோர் பெருந்திருப் பெருந்திரு வடைதற்
குற்றதோர் மாற்றம் புகன்றதே யல்லா லரசருக் கொருவிதத் தேனுங்
குற்றமொன் றியற்ற வில்லையே யுருள்செய் கோதையே யுலகநா யகியே.

வையகம் புகழு மாசிலா மணிநன் மார்க்கமே குடிகொளு மனத்தோன்
சைவநன் னெறியோ டறம்பல புரியுந் தயாநிதி சிதம்பர வள்ளல்
துய்யதோர் சுகுண நிலையதி காரத துரைகளின் றிருவுளத் துறுமேல்
வெய்யதோர் காவற் சிறையினை யகற்றி விடுத்திடற் கையெமொன்
றிலையே.

லால்பேட்டை திரு. நா. குப்புசுவாமிப் பிள்ளையவர்கள் பாடியது.

சத்தியந் தவறாத வுத்தம விவேகியாய்ச் சாது சற்குண யோகியாய்ச் சன்மார்க்க ஞானியாய் நன்மார்க்க நேயராய் சர்வாம்ச மேயாம்ஸராய், கத்திகதை கேடயம் வைத்தகர தீரராய்க் கவிராஜர் புவிராஜராய்க் கருணை தாரராய்க் கல்விப்ர சங்கராய்க் கடவுளுக் கடிய வருமாய், நத்தியே யடைகின்ற ஏழைகள் மகிழவே நலமளித்திடும் வள்ளலாய் நாதமிகு ஸ்ரீமான். வ.உ.சிதம்பரமெனும் நாமத்தை யுடைய வேள்தன், புத்திவளர் ஸ்ரீமதி மீனாச்சி யம்மையின் புண்ய துணையாய் வந்தவர் பொருள்பெற்று புகழுற்று அருள்பற்றி வாழ்கவே பூலோகர் மதியோங்கவே.

டையார் 21-5-1914ல் எழுதிய நிருபம்

நம்மையுந் திருவாக்கிடும் பெருகு நலமெ லாந்தரும் ஞானமும் பயக்கும், இம்மை வேண்டிய பலன்களைக் கொடுக்கு மின்பமுந் தருமில்லறம் பெருக்கும், தம்மையுந் தலைவன் றனைக்காட்டுந் தான தருமமுந் தவறிடா நெறியும், செம்மை யென்பன யாவையு மளிக்குஞ் சிதம்பரம்பிள்ளை திருமுகந் தானே.

பாளையங்கோட்டை திரு. V. சண்முகம்பிள்ளையவர்கள் நிருபம்
1911ம் ஹு ஜூலை-மீ 30ம் வ

மன்னுயிர்த் துணைவன் ஞான வள்ளலாம் வள்ளி நாதன்
என்னுயிர்த் துணைவ னிங்ங னெழுதலு மெழுச்சி பொங்கி
இன்னுயிர்த் துணைகொண் டோங்க விருந்தன ளியம்பா முன்னம்
உன்னுயிர்த் துணையி னீக்க மோர்ந்தன னுழன்றே னையா!

சந்ததி யளிக்கச் சென்றாள் தார்குழ லென்னு மாற்றம்
தொந்தம துணர்த் லாலே சோகம தொழித்துப் போக்கி
நொந்தனை யுறுத்து மேனு நொய்தின்மற் றதனை நோக்கா
சிந்தனை சிதம்ப ரத்தே சென்றிடா தெனவுந் தேர்ந்தேன்.

கேவல மற்ப மொன்றைந் கிளர்ச்சியிற் கிட்டக் கிட்ட
ஆவலி லடக்கு நெஞ்சை யதின்வய மாக்கு மென்னில்
ஓவரும் வினையிற் சாரு முயிர்த்துணைப் புணர்ப்பி னீக்கம்
ஏவருஞ் சகிப்ப துண்டே யிணைகொள விகமு முண்டே.

இயல்பினி லிருக்கு மேற்றத் தியாவுமே யிலையென் றாலும்
அயல்படு மறிவிற் சோர்த லரும்வினைப் பயன தாமால்
கயல்படு கண்ணி நெஞ்சைக் கவரினுங் கவலை நீத்து
மயலறத் தெளிவைச் சார்தல் மாண்புளோர் மதியென் பாரால்

உடலுறு பிணியி னீங்கி யுயர்ந்தவர்க் குறுக ணுண்டோ
கடலுறு மலையைக் காத்தல் கற்பதோ கண்ணிற் றோன்றிப்
படலுறு பண்பிற் றியாவும் பதைப்பறு சித்தத் தொன்றும்
அடலுறா தெனவும் யானோ வறைகுவ னறிவாய் நீயே.

புணர்ந்தனன் பிரிந்தா ளென்னும் பொய்ம்மொழி புகுந்து பார்க்கில்
தணந்தின னைய நீயுந் தையலைத் தணந்தா யல்லை
உணர்ந்தனை யுன்னுந் தோறு முற்றன ளுன்னோ டென்றால்
மணந்தரு மாட்சி யுள்ளாள் மருமத்தே வசிக்கின் றாளால்.

தேறுவா யாத லாலே சென்றன சிந்தை செய்யா
தாறுவா யறிவா லன்றி யடுதுய ராற்றப் போமோ
மாறுவாய் மனம்போ காதே மாற்றுவாய் மையல் தீர
ஏறுவா யருளி னல்லோ ரிணக்கமே யெய்து வாயே.

திருநெல்வேலி ஹிந்து காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
திரு. த.மு. சொர்ணம் பிள்ளை யவர்கள் எழுதிய நிருபங்கள் (27-3-1915)

ஏடெழுதீ யின்று மிளைப்பார்ந்த நேரம்நின்
பாடற் றிரட்டொன்றென் பார்வையென - ஓடிவந்
தஞ்சற் பணியோன் அளிக்கத் திறந்திடஎன்
சஞ்சலஞ்சற் றுத்தணிந்த தால்.

உள்ள இயல்உளத் துள்ள படிஉரைத்த
கள்ளமிலாய்! தூயநின் கட்டுரைகள் - உள்ளில்
உளங்களிக்கும் ஊறடைவார்க் குற்றதுணை ஆகும்
தெளிவளிக்கும் நன்மருந்தாம் தேர்.

(8-6-1915)

அடிகள் இயற்றிவெளி யாக்கியஇவ் வாண்டு
படிக்கும் சிறுவர்க்குப் பாடமா வைக்க
அடியனுளம் வேட்கும் அமையுமெனல் நோக்கக்
கடிதிலொவ்வொன் றீதல் கடன்.

நாகை நீலலோசனிப் பத்திராதிபர்
திரு. சதாசிவம்பிள்ளை யவர்கள் நிருபங்கள் (10-12-1914)

சூற்கொழுநன் மேகமெனச் சொன்மாரி பொன்மாரி சொரிந்தவெங்கள்
வேற்கரனேர் பாற்கரனார் விண்ணுலகஞ் சென்றதன்பின் மேன்மை யாளா!
ஊர்க்குறுநம் பத்திரிகை யூணிலான் நடையெனவே ஊருந் தன்மை
யார்க்குரைப்பேன் பொருளிருந்தால் மும்முறையென்? தினப்பதிப்பு மாக்கலாமே.

(12-2-1915)

மானாருங் கரத்தானை வாயாரப் பாடிவரும் வள்ளா லெங்கள்
கோனாருஞ் சிதம்பரப்பேர்க் குணவானே நின்கடிதக் குறிப்பைக் கண்டேன்
தேனாருங் கவிபாடிச் சின்னாளி லனுப்பிவைப்பேன் சிறிய தந்தை
வானார வழிகொண்டார் மாயாமல் வைப்பதற்கு மருந்துண் டாமோ.

திருவாரூர் திருவள்ளுவர் மடாலயம் ஸ்ரீவி. வைத்தியநாதசுவா
ஸ்தபதியவர்கள் நிருபங்கள் (11-5-1915)

தேசாபி மானியாய்ச் செகமெலாந் துதிக்கும்
நேசனிற் சிறந்தோய் நினக்கு வந்தனம்.

திங்களைத் தரித்தோன் றிருவரு ளதனால்
மங்களம் நினக்கே வருகுக வருகுக.

சான்றோர் புகழுநின் றக்கோர் வசன
மூன்றெனும் புத்தகம் முன்வரப் பெற்றனன்.

அகமிக மகிழ்ந்தனன் ஆர்வ முற்றனன்,
சகமதி னின்புகழ் சாற்றியே நின்றனன்,

குங்குமம் பூதியும் குணமுட னனுப்பினன்
எங்கனு முங்களின் இசையது பெருகவே.

(17-5-1915)

திருநெல் வேலியிற் றேசாபி மானியாய்
உருவெடுத்துமெய் யுற்றவர்க் கன்பராய்த்
திருவுங் கல்வியுஞ் சேர்ந்துமே வாழ்வுறும்
பெருமையோய் நிற்குப் பேசினேன் வந்தனம்.

வந்தனம் செய்து வாழ்த்தி யிதனுளே
தந்தனன் காசி பூதியுங் குங்குமம்
முந்தின தற்குப் பிந்தியே வந்ததால்
இந்தப் போஸ்டில் இவற்றை யனுப்பினேன்.

ஆதலா லிவற்றை யன்பா யணிந்துமே
காத லோடுங் கடித மெழுதுவீர்.
மாது மைந்தரும் மற்றுள நண்பரும்
ஈத லோடுநல் லின்புடன் வாழ்கவே.

மனமது போல வாழ்வெனும் புத்தகம்
இனமுட ன துவின் றெங்கே யிருக்கினும்
வினவியே யதனை விரைவி லனுப்பிடக்
கனிவி னோடியான் கவனமே செய்தனன்.

வாழி யுங்கள் மனைவியும் மைந்தரும்
வாழி யுங்கள் மனமுறுங் கல்வியும்
வாழி யுங்கள் மனமுறும் நண்பரும்
வாழி யுங்களின் வாழ்நாளும் வாழியே.

(18-5-1935)

அன்பதே உருவாய் அவனியிற் றோன்றி அரியதோர் திருக்குற ளதனில்
என்பதும் உரியர் பிறர்க்கென வென்னும் இயல்பினை எண்ணியே யுலகில்
நன்பக லெல்லாம் இடையறா துழைக்கும் நண்ப! என் அறிவினை விளக்கும்
இன்பமே யுடையாய் என்மனை யோடும் இறைஞ்சினேன் நின்னிரு பதமே.

(31-5-1935)

தருமமும் பொறையும் வாய்மையும் வீரத் தன்மையும் ஒழுக்கமும் நடுவுந்
திருவுநற் குணமுந் திருந்துபே ரழகுஞ் சிறப்புமொண் கீர்த்தியுங் கொடையும்
அருளுமா தவமும் புனிதமும் அன்பும் அறிவுமோர் உருவுகொண் டாழி
இருநில முதித்தால் என்னவந் துதித்தான் என்னருஞ் சிதம்பரப் பெயரோன்.

(6-6-1935)

கற்றறிவு குலமேன்மை கருணைபெரும் புகழ்ச்செல்வன் கைம்மாறெண்ணு
துற்றதுவுங் கொடைசீர்மை ஒழுக்கம் அருந்தவநியமம் உறவின் கேண்மை
மற்றெதிரி லாத்திண்மை வாய்மைமிகுந் தூய்மைகுணம் வனப்பு யாவும்
பெற்றுலகில் வாழ்ந்துவரும் சிதம்பரமாம் பிள்ளைபதம் பேசி வாழ்வாம்.

(5-8-1935)

ஆசாரத்திற் கொடையில் அறிவில் விவகாரத்தில் அன்பிற் சொல்லும்
வாசால கத்திலுயர் மதியில்நிறை சம்பத்தில் வாய்மை தன்னில்
கேசாதி பாதம்வரை வடிவழகில் பெரும்புகழிற் கெம்பீ ரத்தில்
ஈசாதி தேவதைக ளிடத்திலன்பிற் சிதம்பரமாம் பிள்ளை யென்பார்.

மலாக்கா ஜேசின். திரு. நெ.வை. செல்லையா அவர்கள் நிருபம் (14-7-1919)

கார்தவழு மாடங் கதித்தோங்கு சென்னையயற்
பேர்வளர்செய் யோங்கு பிரம்பூரிற் - சீர்வளரும்
வி.ஓ. சிதம்பரவேள் வீறுசமு கத்திதுதான்
பி.ஓ. செலுத்தப் பெறும்.

ஈச னருள லெழுதுஞ் சுபநிருபம்
பேசுமுனம் வந்திலவோ பேணியே - வீசுபுகழ்
கொண்டோய் மறந்தனையோ கூறுதிநட் போர்கடிகை
நன்றே மதியார்க்கு நாள்.

(19-4-1919)

மாற்றாரு மடிவணங்கு மாண்புடைய சிதம்பரவேண் மகிபமூவா
றேற்றாண்டு மேடமதி பிரம்பூர்நும் மில்லணுகி யினிதளாவி
வீற்றிருந்த வமயமிளம் பூரணமச் சிடுவதையும் விள்ளக்கேட்டு
நூற்பிரதி தனிலெமக்கு மொன்றளித்தல் வேண்டுமென நுவன்றிட்டேமால்.

கூறிவரு நிருபமுக மளித்தூர்க்குச் சென்றுபல குறைவினாலே
ஊறியவன் பொடுவருமென் றெதிர்நோக்கி வரைதலின்றியுற்றுமீண்டு
தேறியிவணிருக்கின்றேம் விளம்பியநூன் முடிவுபெறின்சீர்த்திமிக்கோய்
வீறிவர வி.பி.யி. வனுப்புகநின்மரட்டளிகொள்விருப்பினேனே.

சேலம் ஜில்லா ஓமலூர் வே.செ. உயர்தரக் கலாசாலை ஆசிரியர் ஸ்ரீமா
தே.வீரராகவ ஐயங்கார் பாடியவை.

பூந்திரை மணிநீர்க் கங்கையிற் புனித மாம்புகழ்த் தாமிர பரணித்
தீம்புனல் மாந்தித் தினகரன் தேரைத் தடுப்பன போல்வளர் செந்நெல்
ஆந்தனக் குப்பை யங்காடி முன்றில் அளப்பரும் அடுக்கலாய்த் துலங்கும்
தேம்பொழில் கமழும் திருவளர் தூற்றுக் குடியெனு மணிநக ரதனில்

முந்நகர் முடித்த முக்கனி யிக்கு மூறுவலூர் முகமதி பாகன்
பொந்நகர் மலர்கொண்டுவப்புறப்போற்றும் பொற்புறுசைவமும்புனித
எந்நகர் மொழியு மிதற்கிணை யில்லை யெனுமெழிற் றமிழதுந் தழைக்க
அந்நகர் செய்த வரும்பெருந் தவத்தாலவதரித் தாயரு ளுருவே.

பெற்றநந் தாயும் பிறந்தபொன் னாடும் பெட்புறு தாய்மொழி மூன்றும்
நற்றவ வானில் கனிசிறந் தனவா மெனமன நன்குறத் தேர்ந்து
கற்றவ னாகங் கேசரி திலகன் களிக்குமெய்த் துணைவனாய்த் துலங்கி
உற்றநன் னாடீங் குய்வகை தேர்ந்தே ஒழிவிலா துழைத்துயிர் சிறந்தோய்.

பண்டைநந் தமிழர் பழுதறப்புரிந்த விரிகடல் செல்வங்க வணிகம்
எண்டிசை யோரு மேங்கிடப் புரிந்த தனிமுதற் றமிழஎம் மானே!
உண்டிடுக்கண்ணொன்றுளதெனக்கண்டசிறுமையோர் கரவதனாலே
கொண்டதை யிழந்தும் கொண்டநின் வீரம் குறைபடா துயர்ந்தது வியப்பே.

ஏழைமெய் தளர்ந்தோ ரெளியவர் கூலித் தொழிலவர் மாதுயர் கடியப்
பாழதே மல்கிக் கனைகுரற் பல்லி யொலிமிகுசிறைதனி லடைந்தாய்!
வாழைய கைம்மா றுளதுகொ னின்பல வகையறி தொண்டுகட் கீடா
வாழையின் குலம்போனீயுநின் குலமும் வாழ்கவ னருளினாற் பேரிதே.

ஆங்கிரச வாண்டா வணித்திங்க ணாள்பங்கில்
பாங்குபெறு பாரதத்தாய் புத்திரன்பேர் - ஓங்கு
சி'தம்பரஞ்செய் சீரறுப தாண்டுவிழாச் செப்ப
பதம்பெரிதும் பற்றாது பார். *(பாடற்றிரட்டு முற்றும்).*

வேளாளன் சிறைப் புகுந்தான்

தேசியக்கவி சி. சுப்பிரமணிய பாரதியார்

வேளாளன் சிறைப் புகுந்தான் தமிழகத்தார் மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதை விரைவிற் கேட்பாய் நீ வருந்தலை, என் கேண்மைக் கோவே!
தாளாண்மை சிறிதுகொலோ யாம் புரிவேம்? நீ இறைக்குத் தவங்கள்ஆற்றி
வேளாண்மை நின்துணைவர் பெறு கெனவே வாழ்த்துதி நீ, வாழ்தி, வாழ்தி!

கோழைப் பட்ட ஜனங்களுக்(கு) உண்மைகள் கூறினாய் - சட்டம் - மீறினாய்
ஏழைப் பட்( ) இங் (கு) இறத்தல் இழிவென்றே ஏசினாய் - வீரம்-பேசினாய்

அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள் ஆக்கினாய் - புன்மை - போக்கினாய்
மிடிமை போதும் நமக்(கு) என் (று) இருந்தோரை மீட்டினாய் - ஆசை - ஊட்டினாய்
தொண்டொன்றே தொழிலாய்க் கொண்டிருந்தோரைத் தூண்டினாய் -புகழ் - வேண்டினாய்.
கண்ட கண்ட தொழில் கற்க மார்க்கங்கள் காட்டினாய் - சோர்வை- ஓட்டினாய்.

இந்தியாவின் இரண்டு திலகங்கள்

மதுர கவி பாஸ்கரதாஸ்

இந்திய தேசாபிமானிகள் இரண்டாம் பாகம் (1923)

வடஇந்தி யாவிற் கொரு திலகம் - நம் சீமான் பால கங்காதரத் திலகம்
திடமுள்ள தென்னிந்தியத் திலகம் - எங்கள் சிதம்பரம்பிள்ளை யொருதிலகம்

சிதம்பரம் பிள்ளையிவர்போல - ஒரு தேசபக்தனு முண்டோ சில - குண
இதந்தரவேணுமென்று இந்தியாவில் முயன்று
இரவு பகலுழைத்த எங்கும் பெயர்ப்பிரசித்த (சிதம்பரம்)
வந்தேமா தரமந்திர மோதி - பல வகையிற் பிரிந்திருக்கும் ஜாதி
இந்தியர் நா மொன்றென்ற நீதி - நமக்கெடுத் துரைத் திட்டஞாய வாதி
நந்தேய மக்களுக்கே நன்மையுண்டாக்குதற்கே நல்ல தவம்புரிந்த நாடெங்கிலுந்தெரிந்த
செய்த பிரசங்கவு தாரன் - கேட்டுச் சேயர் களுமடைந்தார் வீரம்.
மெய்தவறாது மனத் தீரம் - கொண்டு மிகப்புரிந் திட்டாருப காரம்
வையகத்தில் நமக்கே வாழ்வு கொடுப்பதற்கே வந்திங் கவதரித்த வரத பரம சித்த

தங்கும் பாஸ்கரன் தமிழ் ஆட்சி - பெறத் தக்கவழி யிற்பல சூழ்ச்சி
எங்கட் கெடுத் துரைத்தமாட்சி - மையை என்னென் றிசைப் பேனோர்கண் காட்சி
செங்கை விரலெரியத் தேகத்தில் நீர் சொரிய சிறைச்சாலை யிற்பணித்த
செக்குமிழுத் துழைத்த (சிதம்பரம்)

வ.உ.சிதம்பரம் பிள்ளை

உத்தமபாளையம் ப. காமாட்சி பிள்ளை பாடியது
இந்து தேசாபிமானிகள் இனிய ரமணீய கீதம் (1926)

தேசாபிமானிகளில் சிதம்பரம் பிள்ளை யொருவர்
பூஜிதையுடனே தொண்டு புரிந்துவந்த நற்புனிதர்
பொற்புடனே கேட்டிருப்பீர் நண்பர்களே
புந்தியி லறிந்திருப்பீர் அன்பர்களே -
ஆசாரமோடுஇந்த அவனிதன்னிலே முன்னரே
தேசவிரதம் பூண்ட தீர்க்கதரிசி யிவரே
தெக்ஷிண சீமைதனி லின்றைக்குமே
செப்பியவா யாறுவது மேயுண்டுமே -
ஊரின் பொதுநன்மைக்கே ஒற்றுமையுடனுழைத்து
காராக் கிரஹந்தனிலே காத்திருந்த மூலவித்து
காமாட்சி கீதமலர் சூடும்புண்யன்
காங்கிர ஸபிமான முள்ள கண்யன். -

சிதம்பரனார் பஞ்சகம்

பரலி சு. நெல்லையப்பர்

இதம் பெற நாட்டா ரெல்லாம் எண்ணரும் தியாகம் செய்தாய்.
விதம் பெறும் இன்னல் நீங்கி, விடுதலை எய்தி நாட்டார்
பதம் பெறப் பெரிதும் நாடிப் பல்விதத் துழைத்தல் செய்தாய்
சிதம்பரப் பெரியோய், உன்றன் சீரினைப் போற்று கின்றோம்.
நாட்டினில் வணிகம் ஓங்கி நல்வாழ்வு பெருகு மாறே
ஓட்டினாய் நாவாய் அந்நாள் உறுதியும் திறனும் கொண்டே
போட்டியில் எதிர்த்து நின்றாய் புன்மையோர் சூழ்ச்சி யாலே
வாட்டியே சிறையில் இட்டும் மனம் தளராது நின்றாய்.

தமிழ்மொழி ஓங்கி யென்றும் தரணியில் சிறக்கு மாறு
தமிழ் நூல்கள் இயற்றித் தந்தாய், தமிழ்க் குறள் போற்றி நின்றாய்.
தமிழர்கள் புதுவாழ் வெய்தித் தரணியில் ஓங்கு மாறு
தமிழர்கள் தலைவா, நாளும் தளர்விலா துழைத்தல் செய்தாய்.

ஊக்கமும் வலியும் குன்றி ஒளியிழந் துலகில் நீண்ட
தூக்கத்தில் வீழ்ந்த நாட்டைத் துயில் எழச் செய்தாய், ஐய,
பாக்கியம் பெருகி நாட்டார் பாரினில் ஓங்கு மாறு
தூக்கிய வினைகள் செய்தாய் துணிவுமிக் குடைய கோவே.

நற்செயல் பெரிதும் செய்தாய், நாட்டினை அகத்தில் கொண்டுன்
நற்பெயர் நிலவி நிற்கும் ஞாலம்உள் ளளவும் வாழி!

செந்தமிழ் நாட்டுத் திலகன்

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

கப்பலை ஓட்டிக் கடுங்காவற் காளாகி
உப்பிலாக் கூழுண் டுடல்மெலிந்தோன் - ஒப்பிலாத்
தென்னாட்டு வீரர் திலகன் சிதம்பரத்தின்
நன்னாமம் பொற்றுக என் நா.

கண்ணருகி யாயொழுகக் கல்லுடைத்தும் செக்கிழுத்தும்
உண்ண உண வின்றி உடல்மெலிந்த - அண்ணல்
சிதம்பரம் கண்ட சிறைவாசம் இன்று
சுதந்தரம் தந்ததெனச் சொல்.

அஞ்சுவனோ வெள்ளையரின் ஆட்சியொழிப் பேனென்று
வஞ்சினம் கூறிநின்ற மாவீரன் - விஞ்சுபுகழ்
செந்தமிழ் நாட்டுத் திலகன் சிதம்பரத்தைச்
சிந்தையில் கொள்வோம் தினம்.

வல்லாளன் சிதம்பரனார்

- நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை

வல்லாளன் சிதம்பரனார் சிறையிற் பட்ட
வருத்தமெல்லாம் விரித்துரைக்கில் வாய்விட்டோங்கி
கல்லான மனத்தவரும் கண்ணீர்சொட்ட
கனல்பட்ட வெண்ணெய் எனக் கரைவார் இன்றும்

வ.உ.சி. புகழ் வாழ்க

டாக்டர் மு. வரதராசன்

ஒழுக்கத்தின் உரவோய் நாட்டின் உரிமைப்போர் நடந்த காலை
எழுச்சியின் தலைமை ஏற்றே இணையிலாத் தியாகம் செய்தோய்!
மொழிப்பற்றும் நாட்டுப் பற்றும் முற்றிலும் ஒன்றி நிற்க
விழிப்பொறி இரண்டும் போல விழுப்பமாய்க் கொண்டாய், ஐயா!

பாரதி பெற்ற நண்ப! பழியிலா வீர வாழ்க்கை
பாரெலாம் ஏத்தும் வண்ணம் பண்புடன் நடத்தி நின்றோய்!
வேருடன் நைந்து வாடி வெள்ளையர் ஆட்சி வீழ
நேரிலாப் போர்கள் செய்தாய் நித்தமும் நின்பேர் வாழி!

சிங்கம் சிதம்பரனார்

கி.வா. ஜகந்நாதன்

தேசபக்திக் கனல்கொளுத்தச் சிறைசென்ற பெரியோரில் சிறப்புப் பெற்றோன்.
மாசகற்றித் தன்சுகத்தைத் தியாகஞ்செய்தே நாட்டின் வாழ் வுக்காக
ஆசைபெற்றுச் சுதந்தரமே குறிக்கோளாத் தினம்எண்ணி அரிய தொண்டு
மீசுரமாச்செய்தபிரான் வ.உ.சி. எனத் தமிழர் வியக்கும் செம்மல்

பின்னாளில் சிறைசெல்லல் மிகஎளிதா யாகிவிட்ட பெற்றி கண்டோம்;
அந்நாளில் சிறைசெல்ல விரும்புவார் யாருமில்லை; அன்னை நாட்டின்
இன்னாமை போக்குதற்குச்சிறைசென்று செக்கிழுத்தான் என்றால், அன்னோன்
முன்னோண் என்றுரைசெய்யின் அதைமறுத்துப் பொய்யென்று மொழிவா ருண்டே?

கடல்கடக்கக் கப்பல்நனி செலுத்துகலை மேற்கொண்டான்; கலங்கள் செல்ல
விடலின்றிப் பிறர்தகைந்தும் வீறுகொண்டு தன்கொள்கை மேம்ப டுத்தான்;
தொடைகெழுமு தமிழ்ப்பாடல் பலபாடி, உரைநடையில் துலங்கு நூல்கள்
நடைவிளங்கத் தந்துயர்ந்தான் சிதம்பரனாம் தேசபக்தர் நாதன் அன்றே.

வீரமவன் பேருள்ளம், வீரமவன் மிடுக்குரைகள், வீரம் செய்கை;
ஆருமவன் அந்நாளில் செய்தசெய்கை யினைவியந்தே ஆஆ என்றார்;
ஏருடைய பாரதத்தின் விடுதலைக்கா அடிகோலி எழுந்தார் பல்லோர்;
சீருடைய வ.உ.சி. அவருள்ளே மிகமுன்னாம் சிங்கம் அன்றோ?

வ.உ.சிதம்பரனார்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

நாட்டுக்குத் தொண்டு நமக்கு மகிழ்ச்சி!
நடக்கட்டும் போர் என்றான் வாழ்க சிதம்பரன் பேர்!
கேட்டுக்கும் வெள்ளையர் நீட்டுக்கும் துப்பாக்கி
வேட்டுக்கும் வெஞ்சிறை வீட்டுக்கும் அஞ்சாமல் - நாட்டுக்குத் தொண்டு

வீட்டுக்கு வீடு விளக்கேற்றினான் எங்கும்
விடுதலை உணர்ச்சி உண்டாக்கினான்
கூட்டுத் தொழில்களும் ஆக்க வேலைகளும்
குற்றமென்று சொன்ன கொடியவர்க்கும் அஞ்சாமல்-நாட்டுக்குத் தொண்டு

தண்டா விளைச்சல்கள் தங்கச் சுரங்கங்கள்
அண்டும் பெருநாடே எங்கள் உடைமை என்று
தண்டோராப் போட்ட தமிழ னவனையே
தாழ்த்த முயன்ற தக்கைகட் கஞ்சாமல் - நாட்டுக்குத் தொண்டு

ஒப்போம் அயல்நாட் டுடைமைகள் என்றா
உரிமை எவற்றிலும் எமக்கென்று சென்னா
கப்பல் கட்டி ஓட்டினான், வெள்ளையர்
செக்கிழுக்க வைத்தார் அந்தக் கேட்டிலும் - நாட்டுக்குத் தொண்டு.

மானவீரன் வ.உ.சிதம்பரன்

வெள்ளையன் கப்ப லாலே விரிந்தஇந் நாட்டின் செல்வம்
கொள்ளைகொண் டோடல் கண்டு கொதிப்புற்ற சிதம்பரன் பேர்
பிள்ளைதான் பேரூக் கத்தால் பிழைக்கவந் தடிமை கொண்ட
நொள்ளையர் மாயச் செய்தான் நோன்மைசேர் கப்பல் விட்டான்!

கடல்பிறக் கோட்டிச் சென்ற கால்வழி வந்த எங்கள்
அடல்மிகு விடுதலைப் போர் அரிமாக்கள் ஆயிரத்தை
தடந்தோளில் நெஞ்சில் சேர்த்த தமிழனை நினைக்கும் வெள்ளைக்
குடலெலாம் கலங்கும்! தூத்துக் குடியதன் குடிமை காத்தான்.

இந்தியத்தலைவர் எல்லாம் இந்திய வீரர் எல்லாம்
செந்தமிழ்ச் சிதம்பரத்தின் செந்தணல் சிந்தனைக்கே.
முந்தித்தம் செவி கொடுப்பார்! முடிவினை எடுப்பார் வெல்வார்
அந்தமிழ்ப் பாரதிக்கும் அவனன்றோ அரிய அம்மான்.

பகைவனைப் பரங்கிப் பேயைப் பாரத நாட்டிருந்து
தகைப்பதும் உரிமை நாட்டில் தலைமைநிமிர்ந் துயர்ந்து வாழ்தல்
வகையென வேங்கை யாகி வடக்கொடு தெற்க னைத்தும்
தொகைதொகை மறவர் கூட்டம் தொகுத்தனன் வெடி மருந்தாய்!

விடுதலை மறவனுக்கு வெள்ளையர் சுரண்டல் கூட்டம்
கெடுதலை கோடி தந்தார்! உலகினைக் கெடுக்க வந்தார்
படுகொலை வழக்கு நூறு பாய்ச்சினர்; சிறைக் கோட்டத்துள்
கொடு தலை என்றார். வீரச் சிறுத்தையா கோழை யாகும்?

கல்லுடை என்றார் வெள்ளைக் காரரின் அதிகாரத்தின்
பல்லுடைப் பதனைப் போல பாறைகள் உடைத்தார்! நெஞ்சின்
மல்லுடைந் திட்டதில்லை! மறத்தமிழ் நெஞ்சம் இன்பச்
சொல்லுடை படாத பாக்கள் சொல்லிடும் துயர் துடைக்கும்!
திக்கெலாம் திருட வந்த சிவந்ததோல் பரங்கியர்கள்,
வெட்கிட புரட்சித் தீயின் வெடிகளாய்ச்சி தம்பரத்தின்
சுக்குநூ றாக்கும் தோழர் தொல்லைக்கண் டிடிந்த போது
செக்கினை இழுக்கச் செய்தார் சிதம்பரப் பெரியோன் தன்னை.

எண்ணெயைப் பிழிவதைப் போல் ஏ வெள்ளைக் கார ரேநும்
மண்டையைப் பிழிவோம் என்று மனத்தினில் எண்ணி எண்ணி
கண்ணீரைப் பொழிந் திடாமல் கடுந்துயர் உள்ளம் கொள்ளும்;
திண்ணையில் பார்ப்ப னர்கள் தெருச்சோறுண் டுவகை பூப்பார்!

மூவாயுள் கடுஞ் சிறைக்குள் மூடினார் சிதம்பரத்தைச்
சாவாயுள் விழுங்குதற்கும் தவித்தது தமிழ் மானத்தை!
நோய்வாயில் புகுத்து தற்கும் தோற்றது சிறை நொடிப்பு
மாவாயில் திறந்த தோர்நாள் மானவேள் வெளியில் வந்தான்.

உடல் பொருள் ஆவியெல்லாம் உற்றநாட் டுரிமைப் போர்க்குக்
கெடல் இல்லை என இழந்தோன்! கீழ்ப்பட்ட சிறையிருந்து
மடங்கலாய் வந்தான்! ஆனால் ஆரிய மடியில் வாழ்ந்தோர்
அடடவோ சிதம்பரத்தை அணுகிடக் கூசினார்கள்.

நன்றிகெட் டுயிர் வாழ்கின்ற காங்கிரசியக்கத் தார்கள்
பன்றிக்குக் கீழ்ப் பட்டோரே! பரங்கியன் சுரண்டற்குப் பின்
வென்றி என்றுவப்ப தெல்லாம் வெற்றுவேட்டு ரிமை யாகும்
என்றிவர் வாழ்வார்? இல்லை இடியுண்ட மரம்போல் வீழ்வார்.

அறிஞர் அண்ணாவின் விருப்பம்

"மறைந்த மா ரர் வ.உ.சி. அவர்களையும் அவர் நாட்டின் விடுதலைக்காக ஆற்றிய அரும்பெரும் தொண்டுகளையும் மக்கள் மறக்க முடியாது. பேரும் புகழும் பெற்று, சொந்த வாழ்க்கைக்குத் தங்களுடைய உழைப்பும் தேசபக்தியும் பயன்படவேண்டுமென்ற சுயநல நோக்கம் கொண்டவர்களைப் போலன்றி உண்மையாகவே நாட்டுக்கு விடுதலையும், மக்களுக்கு நல்வாழ்க்கையும் ஏற்பட வேண்டுமென்ற பொதுநல நோக்குடன் பேரையும், புகழையும் விரும்பாமல் ஆடம்பரமற்ற வாழ்க்கையை நடத்தி நாட்டுப்பணியாற்றியவர் வ.உ.சி.

செய்நன்றி கொல்லாத தமிழர் பண்பாட்டினை நிலைநாட்டிடவும், சிதம்பரனார் புகழ் என்றும் நிலைக்கவும், ... தமிழ் மக்கள் முன்வந்து ஆவண செய்ய வேண்டுமென்பதே எமது வேண்டுகோளும், விருப்பமும்" என்று தமிழகத்தின் தவப்புதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் கூறிய வரிகளுக்கேற்ப, வ.உ.சியின் புகழ் பாடிய, பரப்பிய முன்னோடிகளின் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்துத் தந்துள்ளேன். ஏறத்தாழ எண்பது, தொன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு பெருமக்கள் பலர் பாடியுள்ள இந்த பழம் பாடல்களுக்கு விளக்கம் தந்து அதனை நூலாக்கிடும் பணியை தமிழறிஞர் சங்கரவள்ளிநாயகம் போன்றவர்கள் செய்திட வேண்டும்; திரு.ஏ.பி.சி.வீ. சொக்கலிங்கம் போன்ற புரவலர்கள் அதற்கு உதவிட வேண்டும்.

வித்வான் சு. உமைதாணு, இளங்கம்பன், நாணல் போன்ற எண்ணற்ற பெருமக்கள் வ.உ.சி. குறித்து பாடிய பாடல்களுடன், தான் எழுதிய கவிதைகளையும், தற்காலத்தில் வ.உ.சி குறித்து வெளிவந்துள்ள கவிதைகளையும் இணைத்து நூலாக்கி, வ.உ.சியின் புகழ் பாடிட இளசை அருணா போன்றவர்கள் முன் வரவேண்டும். வ.உ.சி. எழுதி இதுவரை அச்சில் வராத நூல்களையும், அச்சிலேறி மறுபதிப்பைப் பார்த்திடாத நூல்களையும், அன்றைய இதழ்களில் வ.உ.சி. எழுதிய கட்டுரைகளையும், தேடி எடுத்து வெளியிட வரலாற்று ஆய்வாளர்கள் முன்வர வேண்டும்.

விடுதலைக்கு [illegible]ட்ட வீரத்திருமகன் வ.உ.சி. புகழ் வளர வேண்டும்.
வ.உ.சி. [illegible] நூல்கள் தொடர்ந்து வெளிவர வேண்டும்.
[illegible]ழ்க! வளர்க! வ.உ.சி. புகழ்!

[illegible] LIBRARY
49774

XVC 77

வரலாற்று ஆய்வாளர்

செ. திவான் M.A., M.Phil., எழுதிய நூல்கள்

1. விடுதலைப்போரில் தமிழக முஸ்லிம்கள்
(சீதக்காதி அறக்கட்டளையின் முதல் பரிசு ரூ.10000 பெற்ற நூல்)
2. நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப்
(உணர்வு வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5000 பரிசு பெற்ற நூல்)
3. ஆரியமாயை அகல...
(சங்கொலி வார இதழ் நடத்திய போட்டியில் ரூ.5000 பரிசு பெற்ற நூல்)
4. திருகுர் ஆன் தமிழில் விளக்கம் தந்த அறிஞர்கள்
(தமிழக அரசு - மத்திய அரசு நூலகங்களுக்கு வழங்கப்பட்ட நூல்)
5. நபிபெருமானாரின் நாற்பது பொன் மொழிகள்
6. தக்கலை பீர்முகம்மது (ரஹ்) ஞானப்பாடல்களும் சரிதையும்
7. இந்திய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்ட முஸ்லிம்கள்
8. வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்
9. வ.உ.சி.யின் துன்பத்தின் கற்பனை
10. வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல்
11. வ.உ.சி.யும் பெரியாரும்
12. தெற்கில் ஒலித்த தீன்குரல்
13. விடுதலைப்போரில் விஸ்வகர்மாக்கள்
14. பாரதியும் காங்கிரசும்
15. ஸ்டெர்லைட்டை விரட்டுவோம்!
16. கூடங்குளம் அணு உலையை மூடு!
17. உண்மையின் சவுக்கடி
18. குடை
19. சிந்தனைக்கு
20. மக்கள் திலகமும் மக்கள் தலைவரும்
21. குடைப்புரட்சி
22. கலைஞரை வென்ற வைகோ
23. வாகை சூடி வரும் வைகோ
24. வைகோவின் பொன்மொழிகள்

25. வரலாற்றின் வெளிச்சத்தில் **ஔரங்கஜேப்**
(ஆய்வு நூல்) (ஆசிரியரின் 25வது நூல்) (விற்பனையில்)
524 பக்கங்கள் விலை ரூ. 120

26. சேதுசமுத்திர திட்ட வரலாற்று நாயகன் வைகோ
27. வ.உ.சி. புகழ் பாடிய முன்னோடிகள் (விற்பனையில்)

தேசபக்த செம்மல் வ.உ.சி.யின் புகழ் பாடிடும்
கப்பலோட்டிய தமிழன் குரல் வாசியுங்கள்.
ஆசிரியர் : **வ.உ.சி.ஆ. சண்முகசுந்தரம்** பி.ஏ.,பி.எல்.